TNMD160001132025

ST.C No.321/2025 18.08.2026

**PW –1,புனிதா க/பெ.பால்ராஜ்**

எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 311ன்கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டு, சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை

**எதிரி ஆஜர்.**

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் வீட்டு குடித்தனம் நடத்தி வருகிறேன், வேறு எந்த வேலையும் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் மகளிர் உதவி குழு ஏதாவது நடத்தி வருகிறேனா என்றால் இல்லை. பணம் பெருக்குவதற்கு வங்கியில் முதலீடு ஏதும் செய்வேனா என்றால் இல்லை. நான் வட்டிக்கு பணம் கொடுத்து வாங்குவது மற்றும் பங்கு சந்தை முதலீடு செய்து வருகிறேனா என்றால் இல்லை. எனது கணவர் இராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டார் என்றால் சரிதான். எந்த வருடம் ஓய்வு பெற்றார் என்றால் 2023. எனது கணவர் தற்சமயம் மாங்குளம் ஐஓபி வங்கியில் கிளார்க்காக பணியாற்றி வருகிறார் என்றால் சரிதான். எனது மகன் அபிஷ்குமார் கோயம்புத்தூரில் தங்கி மைக்ரோபயாலஜி படித்து வருகிறார் என்றால் சரிதான். எனது மகள் நிவேதிதா திருமணம் முடிந்து புதுடெல்லியில் வாழ்ந்து வருகிறார் என்றால் சரிதான்.

2) 2023 வருடம் முதல் இன்றுவரை நானும் எனது கணவரும் ஒரே வீட்டில் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். எனது கணவரிடம் கலந்து ஆலோசனை செய்யாமல் எந்தவொரு வரவு செலவும் செய்யமாட்டேன் என்றால் சரிதான், இந்த ஒரு விசயம் மட்டும் எனது கணவரிடம் இருந்து மறைத்துவிட்டேன். எனக்கு எந்த வருடம் திருமணம் நடைபெற்றது என்றால் செப்டம்பர் மாதம் 1994ம் வருடம். அப்போது எனக்கு எங்கள் வீட்டில் எவ்வளவு சீதனமாக கொடுத்தார்கள் என்றால் 25 பவுன். எனது கணவர் இராணுவத்தில் என்னவாக பணிபுரிந்தார் என்றால் சுபேதாராக பணியாற்றினார். என் கணவர் இராணுவத்தில் எந்த துறையில் சேர்ந்தார் என்றால் கணினி பிரிவில் சிப்பந்தியாக சேர்ந்து பின்னர் சுபேதாராக பணி ஓய்வு பெற்றார். எனது கணவர் இராணுவத்தில் இருந்தபோது எனது வீட்டு வரவு செலவுகளை நான்தான் பார்த்து கொண்டேன் என்றால் சரிதான்.

3) எனக்கு தேவையற்ற செலவுகள் மற்றும் வரவுகள் குறித்து தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு நல்லது, கெட்டது பற்றி தெரியுமா என்றால் எனக்கு ஓரளவிற்கு தெரியும். மகேஷ்வரி எங்கள் வீட்டிற்கு எந்த வருடம் வாடகைக்கு வந்தார் என்றால் 2023–மே மாதம். அந்த வீட்டின் வாடகை 8ஆயிரம், முன் பணம் 1லட்சம் என்றால் சரியல்ல. எனது கணவர் பேசிதான் அவர் எங்களது வீட்டிற்கு வாடகைக்கு குடிவந்தார் என்றால் சரியல்ல. மகேஷ்வரி மதுரையில் மாண்புமிகு கூடுதல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.179/2024 என்ற வழக்கில் சட்ட விரோதமாக தன்னை வீட்டிலிருந்து காலி செய்ய கூடாது என்று சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மகேஷ்வரிக்கு 50 ஆயிரம் முன்பணமாக

யார் முன்னிலையில் எந்த தேதியில் எங்கு வைத்து கொடுத்தேன் என்றால் எனது வீட்டில் வைத்து 70ஆயிரம் மே மாதம் 2023ம் வருடம் கொடுத்தேன். அப்போது அங்கு யாரும் இல்லை. அதேபோல் 27-1/2 பவுன் எத்தனை தவணையாக என்ன வகையான பொருட்களாக எந்த தேதியில் எங்கு வைத்து யார் முன்னிலையில் மகேஷ்வரிக்கு கொடுத்தேன் என்றால் மே மாதம் 2023ம் வருடம் மகேஷ்வரிக்கு பணம் கொடுத்த பின்னர் 7 தவணையாக வாராவாரம் கொடுத்தேன், அப்போது யார் முன்னிலையிலும் கொடுக்கவில்லை. 7 தவணையாக பொருட்களின் வகைப்பாடை நான் சொல்ல முடியுமா என்றால் 2ஜோடி தோடு, 2 வளையல்-4பவுன், கருகுமணி பாசி-5பவுன், ஓம் டாலர் செயின்-5பவுன், லாங்க் செயின் ஒன்று-2பவுன், அரை பவுன் தோடு-3ஜோடி, பல வருடங்கள் ஆகிவிட்டதால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை, லிஸட் எனது வீட்டில் உள்ளது. மேற்கூறிய விவரங்களை எனது வழக்கறிஞரிடம் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிலும் புகார் மனுவிலும்இது பற்றி சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்கூறிய நகைகளை கொடுத்த போது எனது கணவரிடம் கேட்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இருந்ததா என்றால் இல்லை, அவரிடம் நான் கேட்கவில்லை.

4) மகேஷ்வரிக்கு மே மாதம் 2023ம் வருடம் நகை, பணம் கொடுத்த பின்னர் எத்தனை நாட்கள் கழித்து எதிரியை யார் மூலம் எனக்கு அறிமுகம் ஆனார் என்றால் மகேஷ்வரி மூலம் ஒரு மாதம் கழித்து அறிமுகமானார். எதிரி எங்கு குடியிருக்கிறார், அவர் என்ன பணிபுரிகிறார், அவர் குடும்ப விவரம் குறித்து விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. எதிரிக்கு

முதல் முறையாக எங்கு வைத்து யார் முன்னிலையில் எப்போது பணம் கொடுத்தேன் என்றால் மே மாதம் 2023ம் வருடம் கடைசியில் மகேஷ்வரி முன்னிலையில் பணம் கொடுத்தேன். எவ்வளவு பணம் எதிரிக்கு கொடுத்தேன் என்றால் ரூபாய் 60 ஆயிரம் கொடுத்தேன். நான் எதிரிக்கு வங்கியிலிருந்து பணம் எடுத்து கொடுத்தேனா அல்லது வீட்டிலிருந்த பணத்தை கொடுத்தேனா என்றால் வீட்டிலிருந்த வீட்டு வாடகை வருமான பணத்தை கொடுத்தேன். எதிரிக்கு எத்தனை பவுன் நகை, எந்தெந்த தேதியில், எத்தனை தவணையாக, யார் முன்னிலையில் கொடுத்தேன் என்றால் 39 பவுன் நகை, தேதி ஞாபகம் இல்லை, 9 தவணையாக கொடுத்தேன், நானாகத்தான் கொடுத்தேன், யார் முன்னிலையிலும் கொடுக்கவில்லை. அந்த நகைகளின் பெயர்கள் மற்றும் எடை அளவுகள் சொல்ல முடியுமா என்றால் லெட்சுமி மாலை ஒன்று–9 பவுன், கவர்னர் மாலை–4–1/2 பவுன், நெக்லஸ் 3–1/2 பவுன், வளையல்–2 ஜோடி–7 பவுன், ஜிமிக்கி 1ஜோடி –3/4 பவுன், மாட்டல் தோடு 3ஜோடி–2–1/2 பவுன், எனது மகனின் புது செயின்–2–1/2 பவுன், சின்ன டாலர் செயின்–2 பவுன், வளையல் 1ஜோடி– 1 பவுன், தாமரை கல் செயின் – 6 பவுன், மோதிரம் 4,5ந்திருக்கும், நாகர் செயின்–1– 2–1/2 பவுன், கைச்செயின் – 3/4 பவுன், மற்றவை தற்போது ஞாபகத்தில் இல்லை.

5) வீட்டில் உள்ள அனைத்து நகைகளையும் முன்பின் தெரியாத ஒரு நபருக்கு தரும்போது அதுக்கு ஆதரவாக ஏதேனையும் எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. நகைகளை எதிரிக்கு கொடுப்பதற்கு முன்பு எனது கணவரிடமோ அல்லது குடும்பத்தினரிடமோ கலந்து ஆலோசனை

செய்தேனா என்றால் இல்லை. மேற்கூறிய நகைகளை எந்தெந்த தேதியில் எதிரியிடம் கொடுத்தேன் என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் இல்லை. எனது மகளுக்கு திருமணத்தின் போது எவ்வளவு பவுன் நகை செய்தேன் என்றால் 60 பவுன். எனது மகளின் குழந்தைக்கு நகை செய்தேனா என்றால் 60 பவுனுடன் சேர்த்துதான் சொல்லியுள்ளேன். எனது மகளின் நகைகள் அனைத்தும் அவர் திருமணம் முடிந்து தனிக்குடித்தனமாக அவரிடம்தான் உள்ளது என்றால் எனது மகளின் 20 பவுன் நகை என்னிடம் இருந்தது. நான் லாக்கர் வசதி எதுவும் பயன்படுத்துவதில்லை என்றால் சரிதான். நான் மகேஷ்வரிக்கும் எதிரிக்கும் மொத்தமாக கொடுத்த நகை 66-1/2 பவுன் என்றால் சரிதான். அதற்கு எழுத்துபூர்வமான ஆவணங்கள் எதுவும் எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான். அதேபோல் 1,30,000/-ற்கு காசோலையோ, புரோநோட்டோ அல்லது 100 ரூபாய், 200 ரூபாய் பத்திரத்தில் எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான். அதிக தொகையும் நகையும் கொடுத்ததற்கு கணவர் மற்றும் குடும்பத்தாருக்கு தெரிந்தால் பிரச்சினை வரும் என்று நினைக்கவில்லையா என்றால் எதிரி பணம் திருப்பி செலுத்திவிடுவதாக சொன்னார், அதை நம்பினேன்.

6) அந்த காலகட்டத்தில் எனது கணவர் என்னுடன்தான் வசித்து வந்தார் என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் எனது மகள் விடுமுறைக்கு மதுரைக்கு வந்தார் என்றால் சரிதான். அப்போதாவது எனது மகள் அவரது நகைகள் குறித்து என்னிடம் கேட்டாரா என்றால் பிப்ரவரி மாதம் 2024 வருடம் கேட்டார், நான் பின்னர் தருவதாக என் மகளிடம் சொன்னேன். எனது கணவரின் வருமானத்தை தவிர எங்களது குடும்பத்தில் வேறு வருமானம்

இல்லை என்றால் சரிதான். எனது கணவரின் தற்சமய ஓய்வூதியம் எவ்வளவு என்றால் ரூபாய்.50 ஆயிரம். எனது கணவர் ஓய்வு பெற்றபோது கடைசியாக பெற்ற வருமானம் எவ்வளவு என்றால் ரூ.67,000/-. எனது கணவர் இராணுவத்தில் பணிபுரிந்த காரணத்தினால் எங்கள் வீட்டு பொருட்கள் அனைத்தும் இராணுவ கேண்டீனில் வாங்குவோம் என்றால் சரிதான். எங்களது திருமணத்திற்கு பின்னர் இன்றைய நாள் வரை எவ்வளவு நகை வாங்கியுள்ளேன் என்றால் எனக்கு மட்டும் 45 பவுன் வாங்கியுள்ளேன். அதற்கான ஆவணங்கள் என்னிடம் உள்ளதா என்றால் அவ்வளவாக இல்லை. எத்தனை பவுன் நகைக்கு இரசீது வைத்துள்ளேன் என்றால் இரசீது இல்லை. நான் எந்த காலத்திலும் எதிரிக்கு நகையை இரவலாகவோ, கடனாகவோ கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வளவு பெரிய தொகையை எதிரிக்கு கொடுப்பதற்கு எனக்கு வசதியில்லை என்றால் சரியல்ல.

7) மகேஷ்வரியை வீடு காலி பண்ண சொன்னதினால் எனக்கும் அவருக்கும் இடையே மனஸ்தாபம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. ஒரு வருடமாக அவர் வீட்டு வாடகை செலுத்தவில்லை, அதை கேட்க சென்றபோதுதான் மனஸ்தாபம் ஏற்பட்டது. எந்த தேதியில் வாடகை கேட்க சென்றேன் என்றால் ஜீன்-2024ம் தேதி. அந்த தேதியிலிருந்து இன்று வரை நானும் அவரும் மனகசப்பில் இருந்து வருகிறோம் என்றால் சரிதான்.

(**குறுக்கு விசாரணை 2.30 மணிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**)

**PW –1,புனிதா க/பெ.பால்ராஜ்**

2.30 மணிக்கு சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

**எதிரி ஆஜர்.**
**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>**

1) நான் திருப்பாலை காவல்நிலைய எல்கைக்குள் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். நான் காசோலையை வசூலுக்கு செலுத்திய வங்கி ஒத்தக்கடை காவல்நிலைய எல்கைக்கு உட்பட்டது என்றால் சரிதான். எனது வரவு – செலவு எந்த வங்கியில் வைத்துள்ளேன் என்றால் எனது கணவரிடம் மட்டும்தான் வங்கி கணக்கு உள்ளது. இவ்வழக்கின் காசோலையை வசூலுக்கு செலுத்துவதற்காகத்தான் மாங்குளம் வங்கியில் கணக்கு தொடங்கினேன் என்றால் சரியல்ல. மாங்குளம் ஐஒபி வங்கியில் எத்தனை வருடங்களாக வரவு செலவு செய்து வருகிறேன் என்றால் 4 வருடங்களாக செய்து வருகிறேன். எதிரிக்கு பணம் மற்றும் நகையை இரவல் கொடுத்த விவரத்தை எனது கணவரிடம் முதன்முதலில் எப்போது சொன்னேன் என்றால் பிப்ரவரி மாதம் 2024 வருடம் சொன்னேன். நகை, பணம் கொடுத்தது தொடர்பாக எனக்கும் எனது கணவருக்கும் இடையே சண்டை எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல, சண்டை வந்தது. நான் முதன்முறை திருப்பாலை காவல்நிலையத்தில் எதிரி மீது புகார் கொடுத்தேன், அதற்கு அந்த காவல்நிலையத்தில் CSR No.160/2024 கொடுக்கப்பட்டது

என்றால் சரிதான். அந்த வழக்கு உரிமையியல் வழக்கு என்று அதற்கான பரிகாரத்தை நீதிமன்றத்தில் பெற்றுக்கொள்ள சொல்லி முடிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

2) பின்னர் தல்லாக்குளம் காவல்நிலையத்தில் எதிரி மற்றும் மகேஷ்வரி மீது நான் புகார் கொடுத்து அதற்கு CSR No.264/2024 கொடுக்கப்பட்டது, அதற்கு விசாரித்த பின்னர் அந்த வழக்கு உரிமையியல் வழக்கு என்று அதற்கான பரிகாரத்தை நீதிமன்றத்தில் பெற்றுக்கொள்ள சொல்லி முடிக்கப்பட்டது என்றால் விசாரணை செய்தார்கள், ஆனால் அது பற்றி எனக்குத் தெரியாது. அதன் பின்னர் தல்லாக்குளம் உதவி ஆணையரிடம் புகார் கொடுத்தேனா என்றால் சரிதான். அந்த புகாரும் உரிமையியல் தன்மை என்று சொல்லப்பட்டது என்றால் சரிதான். மகேஷ்வரி தல்லாக்குளம் காவல்நிலையத்தில் எனது கணவர் தன்னிடமும் இவ்வழக்கின் எதிரியிடமும் தவறாக நடந்து கொள்ள முயன்றதாக புகார் கொடுத்துள்ளார் என்றால் அது பொய் புகார். அதில் என்னையும் எனது கணவரையும் கண்டித்து மகேஷ்வரி குடியிருக்கும் வீட்டிற்கு செல்லக் கூடாது என்று கண்டித்து அனுப்பினார்கள் என்றால் சண்டை சச்சரவு வேண்டாம் என்றும் நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ள சொன்னார்கள்.

3) நான் இந்த நகை, பணம் குறித்து எத்தனை முறை பஞ்சாயத்து பேசினோம் என்றால் எங்கள் வீட்டில் வைத்து ஒரு முறை பஞ்சாயத்து பேசினோம். ரிசர்வ்லைன் மாரியம்மன் கோவிலில் வைத்து பஞ்சாயத்து பேசினோமா என்றால் இல்லை. எனது வழக்கறிஞர் அய்யப்பராஜா அலுவலகத்தில் வைத்து பஞ்சாயத்து பேசினோமா என்றால் இல்லை. எங்கள்

வீட்டில் எந்த தேதியில் யார்யார் முன்னிலையில் பஞ்சாயத்து பேசப்பட்டது என்றால் 26.06.2024ம் தேதி, நான், எனது கணவர், மணிகண்டன், மகேஷ்வரி, மேலும் எதிரியுடன் இரண்டு நபர்கள் வந்தார்கள், அவர்கள் யார் என்று எனக்குத் தெரியாது. அந்த காலகட்டத்தில் மகேஷ்வரி எங்கள் வீட்டில்தான் குடியிருந்தார் என்றால் சரிதான். கீழ்தளத்தில் அல்லது மேல்தளத்தில் குடியிருந்தாரா என்றால் கீழ்தளத்தில் குடியிருந்தார். பஞ்சாயத்து பேசிய அன்று என்ன நடந்தது என்றால் சமரசம் பேசியபோது நகைகள் இல்லை என்றும் அன்றைய தினத்தில் 40 பவுனிற்கான பணம் மற்றும் வாங்கிய பணத்தையும் ரூ.23,50,000/– தருவதாக ஒப்புக்கொண்டு எதிரி சிந்து 2 காசோலையும், மகேஷ்வரிக்கு வங்கி கணக்கு இல்லை என்பதால் அவரது கணவர் மணிகண்டன் 2 காசோலைகளையும் கொடுத்தார். அது தவிர வேறு எதுவும் அன்றைய தினம் நடக்கவில்லை என்றால் சரிதான்.

4) 66–1/2 பவுன் மற்றும் ரூ.1,30,000/– எதிரிக்கும் மகேஷ்வரிக்கும் இரவலாக கொடுத்துவிட்டு ரூ.23,50,000/– பேசியதற்கு ஏதேனும் சிறப்பு காரணம் உள்ளதா என்றால் அவர்கள் எங்கள் மீது புகார் கொடுத்திருந்தார்கள். அதனால் இரு தரப்பினர்களும் பேசி சமரசமாக பேசி அன்றைய தேதியில் 40 பவுன் நகைக்கான மதிப்பை ரொக்கமாக தருவதாக சொன்னார்கள். அதனால் நாங்கள் விட்டுக் கொடுத்துவிட்டோம் என்றால் வயதான காலத்தில் கோர்ட் கேஸ் என்று அலைய முடியாது என்று ஒப்புக் கொண்டோம். அன்றைய தினம் சமரசம் நடந்தது எல்லாம் எங்கள் வீட்டின் மேல்தளத்தில் என்றால் சரிதான். அன்றைய தினம் போலீசார், வழக்கறிஞர்கள் வரவில்லை என்றால் சரிதான். அதன் பின்னர் பஞ்சாயத்து எதுவும் நடக்கவில்லை என்றால்

சரிதான், பஞ்சாயத்து பேசி முடித்து இருவரும் பூர்த்தி செய்த காசோலையை என்னிடம் கொடுத்தார்கள். அன்றைய தினம் வேறு எதுவும் நடக்கவில்லை என்றால் சரிதான்.

5) அன்றைய தினம் பஞ்சாயத்து நடந்த பின்னர் இன்று நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும் வரை வேறு எங்கும் பஞ்சாயத்து எதுவும் நடக்கவில்லை என்றால் சரிதான். பு.த.சா.ஆ.3 யாரால் பூர்த்தி செய்யப்பட்டது என்றால் எதிரி பூர்த்தி செய்து கொடுத்தார். காசோலையில் தொகை ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். காசோலையில் எனது பெயர் தமிழில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் காசோலையில் உள்ள கையொப்பம் மையிற்கும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள மற்ற விவரங்களின் மையும் வெவ்வேறாக உள்ளது என்றால் சரியல்ல, எனது கண் மங்கலாக உள்ளதால் எனக்கு சரியாக தெரியவில்லை. இவ்வழக்கின் காசோலை எண் மற்றும் மற்றொரு வழக்கான **STC 322/2025** உடைய காசோலை எண் முறையே 000001, 000002 என்றால் சரிதான். இவ்வழக்கின் காசோலையை எத்தனை நாட்கள் கழித்து வசூலுக்கு செலுத்த சொன்னார்கள் என்றால் 06.09.2024ம் தேதி வசூலுக்கு செலுத்த சொல்லி சொன்னார்கள். இவ்வழக்கின் காசோலையில் பஞ்சாயத்தில் நடந்த தேதிதான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6) தல்லாக்குளம் காவல்நிலைய போலீசார் வற்புறுத்தலின் பேரில் என் கணவரின் செல்வாக்கை பயன்படுத்தி எதிரி சிந்துவிற்கு ஜூன் 2024ம் தேதி தல்லாக்குளம் KVB வங்கியில் புதிதாக கணக்கு ஆரம்பித்து அன்றைய தினமே காசோலை புத்தகம் பெறப்பட்டது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

போலீசார் என்னை விசாரித்தபோது காசோலை என்னிடம் இல்லை என்றும் எதிரி காசோலை புத்தகம் பயன்படுத்துவதில்லை என்று சொன்னாரா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. பு.த.சா.ஆ.1 ஆவணத்தில் எதிரியின் கையொப்பம் அல்லது எதிரி சம்மந்தமாக எந்த விவரமும் இல்லை, மணிகண்டன் எழுதிக் கொடுத்ததாக உள்ளது என்றால் மகேஷ்வரிக்காக மணிகண்டன் எழுதிக்கொடுத்த ஆவணம். இந்த ஆவணத்தில் சிந்து குறித்த எந்த விவரமும் இல்லை என்றால் சரிதான், மகேஷ்வரி, மணிகண்டன் பற்றிதான் உள்ளது.

7) இவ்வழக்கின் காசோலை எனது கணவரின் செல்வாக்கை பயன்படுத்தி எதிரியிடமிருந்து பெற்று வழக்கிற்காக பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் திருப்பாலை காவல்நிலையத்தில் 66–1/2 பவுன் நகையும், பணமும் பெற்றுத் தரக்கோரி நான் கொடுத்த புகார் என்றால் சரிதான். **(அந்த புகார் மனுவின் சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**. அந்த புகார் மனு விசாரணை செய்யப்பட்டு அதற்கு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு மதுரை, குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2ல் CC 3042/2025ஆக நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கு நிலுவையில் உள்ளது, அதில் எதிரி ஆஜராகி கொண்டு உள்ளார் என்றால் அந்த வழக்கு முடிவடைந்து விட்டது. சாட்சி மீண்டும் ஆம் அந்த வழக்கு நடந்து கொண்டிருக்கிறது என்று சாட்சியம் அளிக்கிறார். **(அந்த வழக்கிற்கான குற்ற இறுதி அறிக்கை சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

6) மகேஷ்வரி வீட்டை காலி செய்யக் கூடாது என்ற வழக்கை நல்ல முறையில் திரும்ப பெற்றுவிட்டார் என்றால் சரிதான். அதேபோல் அவர் வீட்டை நல்ல முறையில் காலி செய்து என்னிடம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல, வீட்டை சேதப்படுத்திவிட்டுதான் என்னிடம் கொடுத்தார். நான் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வருகிறேன், அதேபோல் நான் ஆடம்பரமாக வாழ்ந்து வருகிறேன், அடிக்கடி கோயில், குளம் என்று சுற்றுபயணம் செல்வேன் என்றால் சரியல்ல. எனக்கு அடிக்கடி நகையை மாற்றி செய்யும் பழக்கம் உள்ளது என்றால் சரியல்ல. நான் வளரும் வைகை என்ற மகளிர் சுயஉதவிக் குழு நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் வளரும் மதுரை என்ற பெயரில் பங்கு சந்தையில் வணிகம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய தவறை மறைப்பதற்காக எனது கணவருக்கு பயந்து எதிரியிடம் நகை, பணம் கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் காசோலையானது சட்டப்படியான கடனுக்காக கொடுக்கப்பட்ட காசோலை அல்ல, காவல்துறையினரின் கட்டாயத்தினால் பெறப்பட்ட காசோலை என்றால் சரியல்ல. வீடு காலி செய்வதற்கான முன்விரோதம் காரணமாகவும் பொய்யாக எனது கணவரின் வெறுப்பை சம்பாதித்து விடுவேன் என்ற காரணத்திற்காக பொய்யாக கொடுத்த புகார் என்றால் சரியல்ல.

7) பு.த.சா.ஆ.2 எந்த தேதியில் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் 27.07.2024ம் தேதி எதிரி எழுதிக் கொண்டு வந்து கொடுத்தார். அப்போது யார்யார் அங்கு இருந்தார்கள் என்றால் நானும் எனது கணவரும் இருந்தோம். அந்த ஆவணத்தில் யார்யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால் எனது

கணவர் மற்றும் மணிகண்டன் சாட்சி கையொப்பம் செய்தார்கள். அந்த பத்திரம் யாரால் வாங்கப்பட்டது, எங்கு வைத்து தட்டச்சு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் எதிரிதான் எடுத்து வந்தார். பு.த.சா.ஆ.1, 2 காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் பெற்று பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் எதிரியை அலைக்கழிக்க வேண்டும் என்று பொய்யாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கின் காசோலை மறுபயனிற்கும் எந்த சம்மந்தமுமில்லை என்றால் சரியல்ல.